

▶ உலக சிட்டுக்குருவிகள் தினமான நேற்று, கோவை வன உயிர் பாதுகாப்பு வலை அறக்கட்டளை சார்பில் சிட்டுக்குருவி பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

19.3.14

தினமணி

# சிட்டுக்குருவி இனம் 40 சதவீதம் அழிந்துவிட்டது

## சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை

கோவை, மார்ச் 19: உலக சிட்டுக்குருவிகள் தினத்தை முன்னிட்டு நேற்று கோவையில் விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் பள்ளி, கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர்.

உலக சிட்டுக்குருவிகள் தினத்தை முன்னிட்டு கோவை வன உயிர் பாதுகாப்பு வலை அறக்கட்டளை மற்றும் கோபால்சாமி நாயுடு குழந்தைகள் பள்ளி சார்பில் அழிந்து வரும் சிட்டுக்குருவிகளை காப்பாற்ற வலியுறுத்தி நேற்று பேரணி நடந்தது. ஆர்.எஸ்.புரம் விவேக்ஸ் முன்பு துவங்கிய பேரணிக்கு வன உயிர் பாதுகாப்பு வலை அறக்கட்டளை துணைத்தலைவர் ஆனந்தவனிதா தலைமை வகித்தார். எழுத்தாளர் பாமரன், சுற்றுச்சூழல் ஆர்வலர் யோகநாதன் துவக்கி வைத்தனர். இதில் பள்ளி குழந்தைகள் சிட்டுக்குருவி போல் உடையணிந்து பங்கேற்றனர். ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரி உள்பட பல்வேறு கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர். பேரணி நிறைவில் ஆம்னி பஸ் ஸ்டாண்டில் சிட்டுக்குருவிகள் வசிக்க தேவையான கூண்டுகளை பொருத்தினர்.

இதில் அறக்கட்டளை துணைத்தலைவர் ஆனந்த வனிதா பேசுகையில், 'குடிசைகளில், ஓடு வீடுகளில் கூடு கட்டி வந்த சிட்டுக்குருவிகளின் வாழ்விடம், தற்போது மாறிவிட்ட கட்டுமான குடியிருப்புகளால் இருப்பிடத்தை இழந்துவிட்டது. சிட்டுக்குருவி உண்ட தானியமும் நமது உணவு மாற்றத்தால் மாறிவிட்டது. இவ்வாறு பல காரணங்களால் சிட்டுக்குருவி இனம் 40 சதவீதம் அழிந்துவிட்டது. சிட்டுக்குருவிகளை பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பேரணி நடக்கிறது.' என்றார்.

எழுத்தாளர் பாமரன் பேசுகையில், 'குழந்தைகள், டிவிகளில் விலங்குகளையும், பறவையினங்களையும் பார்த்து இன்புறும் நிலையிலிருந்து விலகி, அருகிலுள்ள நீர் நிலைகளுக்கும், வனப்பகுதிக்கும் சென்று வனவிலங்குகள் மற்றும் பறவையினங்களை காட்ட பெற்றோர் முன்வர வேண்டும்.' என்றார்.

சுற்றுச்சூழல் ஆர்வலர் யோகநாதன் பேசுகையில், 'சிட்டுக்குருவிகள் கூடு கட்ட வாழ்விட சூழ்நிலை இல்லாமல், செல்போன் டவர்களில் கூடு கட்டி வசிக்கின்றன. அங்கு அவை இடும் முட்டைகள் செல்போன் டவர் கதிர் வீச்சினால் அழிந்து விடுகிறது. சிட்டுக்குருவிகளுக்குரிய வாழ்விட சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால் அழிந்துபோன பறவைகளின் பட்டியலில் சிட்டுக்குருவியும் சேர்ந்து விடும்' என்றார்.

தூத்துக்குடி மன

# கொலை வ
# மேலும் ஒரு

## திருப்பூர் நீதிமன்றத்தில் சரணடைந்தார்

திருப்பூர், மார்ச். 19: தூத்துக்குடி மாநகராட்சி மண்டல தலைவர் கொலை வழக்கில் மேலும் ஒருவர் நேற்று திருப்பூர் ஜே.எம் 2 கோர்ட்டில் சரணடைந்தார்.

தூத்துக்குடி அண்ணா நகர் 8வது தெருவை சேர்ந்தவர் வெள்ளப்பாண்டி(55). இவர், தூத்துக்குடி மாநகராட்சி 37வது வார்டு கவுன்சிலராகவும், மேற்கு மண்டல தலைவராகவும் இருந்தார்.

கடந்த 8ம் தேதி அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு வந்து கொண்டு இருந்த போது அவரை வழிமறித்து மர்மகும்பல் சரமாரியாக கத்தியால் குத்தி, கழுத்தையும் அறுத்து விட்டு